


# "பெரும்பான்மைவாதத்துக்கு எதிரான கருத்தியல்தான் திராவிடம்!"

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தில், ‘I BELONG TO THE DRAVIDIAN STOCK’ என்ற தலைப்பில் கழகச் செய்தித் தொடர்புக்குழு துணைச் செயலாளர் மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா அவர்கள் ஆற்றிய உரை:**

“ ‘*I BELONG TO THE DRAVIDIAN STOCK*’ என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்தில் பேசும்போது, அதை ஒரு பிரிவினைவாதப் பேச்சாகத்தான் அன்றைக்கு இருந்தவர்கள் பார்த்தார்கள். ஆனால், அது ஒரு பிரிவினவாதப் பேச்சு கிடையாது. மாறாக, அனைவரையும் உள்ளடக்கும், அரவணைக்கும் பேச்சு.

‘நான் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவன்’ என்று சொல்லும்போதே, ‘நான் வங்காளிகளுக்கோ மராத்தியருக்கோ எதிரானவன் இல்லை’ என்பதை அண்ணா தெளிவுபடுத்தினார்.

### ஒற்றுமைக்கான குரல்

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த உரையை நிகழ்த்தும்போது, சுதந்திர இந்தியா உருவாகி 15 ஆண்டுகள் ஆகி இருந்தன. அந்த 15 ஆண்டுகளில் அவர்களால் ஒற்றுமையை உருவாக்க முடியவில்லை, அவர்கள் சமூகத்தில் இருக்கக்கூடிய ஏற்றத்தாழ்வுகளைத் தத்துவமாக வைத்து, ஒரு நாட்டை கட்டமைக்க வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால், பேரறிஞர் அண்ணா முற்றிலும் மாற்றான கருத்தியலை வைத்தார். அது என்னவென்றால், பிறப்பால் உயர்ந்தவனும் கிடையாது, தாழ்ந்தவனும் கிடையாது.

அவர்கள் பேசுவது ஆரிய கோட்பாட்டின் அடிப்படையில், வெள்ளையாக இருப்பவன் வேறு, கருப்பாக இருப்பவன் வேறு, இந்தி பேசுபவன் வேறு, தமிழ் பேசுபவன் வேறு, மற்ற மொழிகள் பேசுபவன் வேறு என்று வேற்றுமைக்கான கோட்பாட்டை அவர்கள் வைக்கும்போது, இந்த திராவிட கோட்பாடு, ‘எல்லோரும் சமம். இந்தி பேசினாலும், தமிழ் பேசினாலும், வெள்ளையாக இருந்தாலும், கருப்பாக இருந்தாலும், நாமெல்லாம் ஒன்று’ என்ற ஓர் அரசியல் முழக்கத்தை முன்வைத்ததால்தான் ‘திராவிடர்களான எங்களிடத்தில் முற்றிலும் மாறுபட்ட, திட்டவட்டமான ஒரு தனித்துவமான கருத்தியல் இருக்கிறது’ என்று சொன்னார் அண்ணா.

‘நான் மராத்தியருக்கு எதிரி அல்ல, நான் குஜராத்தியருக்கு எதிரி அல்ல, நான் வங்காளிக்கு எதிரி இல்லை’ என்கிறபோது தனிநபர்களைக் காட்டாமல் பெரியார் எந்தக் கோட்பாட்டை எதிரியாகக் காட்டினாரோ, அந்த ஆரியத்தை எதிரியாகக் காட்டுகிறார் பேரறிஞர் அண்ணா.

அந்தக் கோட்பாட்டை அன்றைக்கு பேரறிஞர் அண்ணா எதிர்த்தார், பிறகு கலைஞர் எதிர்த்தார், இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் எதிர்த்துக் கொண்டிருக்கிறார். அதற்குமேல் ஒரு படி தாண்டி இளைஞர் அணிச் செயலாளர் எதிர்த்துக் கொண்டிருக்கிறார். அதனால்தான் ‘நீ என் மீது வழக்கு போடு, இந்த ஏற்றத்தாழ்வுகளை ஊக்குவிக்கின்ற, ஆதரிக்கக்கூடிய அந்த சித்தாந்தத்தை அழிக்கும் வரையில் நான் போராடுவேன், வழக்குகளுக்கு அஞ்ச மாட்டேன்’ என்று உரக்கச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதுதான் திராவிடியன் ஸ்டாக்காக, ஓர் அரசியல் முழக்கமாக ஆரியத்துக்கு எதிராக நிற்பது என்பது.

இந்தியாவில் கடந்த 11 ஆண்டுகளில் இருக்கின்ற மிகப் பெரிய பிரச்சினை பெரும்பான்மைவாதம். அது மதப் பெரும்பான்மை வாதமாக இருந்தாலும் சரி, மொழிப் பெரும்பான்மை வாதமாக இருந்தாலும் சரி, அது ஆபத்தானது. நீங்கள் நினைக்கலாம் ‘மோடி 11 ஆண்டுகளாகத்தானே ஆட்சியில் இருக்கிறார், அதற்கு முன்பு இந்தப் பிரச்சினையே இல்லையா?’ என்று. உண்மைதான். இந்தப் பிரச்சினைகள் இருக்கத்தான் செய்தன. ஆனால், இப்போதோ அது தேர்தல் வெற்றிக்கான விஷயங்களாக மாறிவிட்டன. எனவே, முன்பைவிட அது ஆபத்தானது.

இன்றைக்கு நீங்கள் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்றால், அகில இந்திய அளவில் களப்பணி ஆற்ற வேண்டும் என்ற அவசியம் கிடையாது. மக்களுக்கு சாலை போட வேண்டும் என்ற அவசியம் கிடையாது. பள்ளிக்கூடம் கட்டித் தர வேண்டும் என்ற அவசியம் கிடையாது. வேலை வாங்கித் தர வேண்டும் என்ற அவசியம் கிடையாது. அவர்களுக்கு சுகாதாரத்தைக் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. பெரும்பான்மைவாதத்தை முன்வைத்தால் போதும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. இது மிகவும் ஆபத்தானது.

பிரதமர் மோடி தேர்தல் பிரச்சாரத்துக்கு ஒரிசாவுக்குச் சென்று, ‘தமிழர் இந்த மாநிலத்தை ஆள முடியுமா?’ என்று பிரச்சாரம் செய்கிறார். பீகாருக்குச் சென்றால், தமிழ்நாட்டில் பீகாரிகளைத் துன்புறுத்துகிறார்கள் என்று பொய்ப்பிரச்சாரம் செய்கிறார், இந்திய நீரோட்டத்தில் இருந்து தமிழர்களைத் தனிமைப்படுத்தும் அரசியலைப் பேசி, அந்த அரசியல் மூலமாகத் தேர்தல் வெற்றியைப் பெறக்கூடிய ஒரு தத்துவத்தை, அவர்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள்.

அதேமாதிரி மத ரீதியாகத் தனிமைப் படுத்தக்கூடிய அரசியல். ‘இந்துக்களிடம் இரண்டு எருமை மாடுகள் இருந்தால் அதில் ஒன்றைப் பறித்து, முஸ்லிம்களிடம் காங்கிரஸ் தந்துவிடும்’ என்று பிரச்சாரம் செய்கிறார். இப்படி மதப் பெரும்பான்மை வாதத்தையும் மொழிப் பெரும்பான்மைவாதத்தையும் முதலீடாகக் கொண்டு பா.ஜ.க. அரசியல் செய்கிறது.

எந்த அளவுக்கு இது அபாயகரமாக இருக்கிறது என்றால், பாபா சாகேப் அம்பேத்கர் கொண்டு வந்த இந்த அரசியல் அமைப்பைப் பாதுகாக்கின்ற, உச்சபட்ச பதவியாக இருக்கக்கூடிய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் மீது செருப்பைத் தூக்கி வீசிவிட்டு, தைரியமாக வெளியே வந்து, ‘இது ஆண்டவன் கட்டளை அதனால் செய்தேன்’ என்று சொல்லக்கூடிய துணிச்சல், இன்றைக்கு வந்திருக்கிறது. அந்தத் துணிச்சலுக்கு எதிரான ஒரு கருத்தியல் இருக்கிறது என்றால், அது திராவிட கருத்தியல் மட்டும்தான்.

அடுத்தபடியாக பா.ஜ.க. கையில் எடுக்கும் ஆயுதம் மிரட்டல் அரசியல். தமிழ்நாட்டுக்கு நிதி தர மாட்டேன், கல்வி உரிமையைப் பறிப்பேன், ஏனென்றால் நீங்கள் நன்றாகப் படித்துவிட்டு எங்களைக் கேள்வி கேட்கிறீர்கள், நாங்கள் மூன்றாவது மொழியாக இந்தியை உங்கள் மீது திணிக்க முயற்சி செய்கிறோம். இந்தித் திணிப்பு, பிறகு சமஸ்கிருதத் திணிப்பாக மாறும். அதற்கு நீங்கள் எங்களோடு ஒத்துப்போகத் தயாராக இல்லையென்றால், உங்களுக்கு நியாயமாகத் தர வேண்டிய கல்வி நிதியைத் தர மாட்டோம்’ என்று மிரட்டி பார்க்கக்கூடிய அரசியல்.

இந்தப் பெரும்பான்மைவாத, மிரட்டல் அரசியலுக்கு எதிரானதுதான் திராவிடம். நீ தனிமைப்படுத்துகிறாய் என்றால், நாங்கள் யாரையும் தனிமைப்படுத்த மாட்டோம். எங்களுக்கு பிறப்பால் உயர்ந்தவர், தாழ்ந்தவர் கிடையாது. நீங்கள் திராவிடராக இருக்க வேண்டும் என்றால், தமிழ்நாட்டிலோ, கர்நாடகாவிலோ, ஆந்திராவிலோ, கேரளாவிலோ மட்டும்தான் பிறந்திருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. சமத்துவத்தை ஏற்றுக்கொண்ட அனைவரும் திராவிடர்கள் என்ற ஒரு கோட்பாட்டோடு ஓர் அரசியல் முழக்கத்தை ஓர் அரசியல் தத்துவத்தைக் கட்டமைத்தார் பேரறிஞர் அண்ணா. அந்தத் தத்துவத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், இந்தியாவில் இருக்கக்கூடிய தமிழர்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கக்கூடிய வடமாநிலத்தில் உள்ள ஒடுக்கப்படுகின்றவர்களுக்கும் குரலாக இருக்கக்கூடிய ஓர் இயக்கம் என்றால், அது திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதன் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் மட்டும்தான்.

இப்படி பா.ஜ.க-வின் அரசியலுக்கு முற்றிலும் நேர்மாறான இயக்கமாக இருப்பதால்தான் பா.ஜ.க. தொடர்ந்து தி.மு.க-வை அச்சுறுத்தப் பார்க்கிறது; தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது. ஒன்றிய அரசின் எல்லா சதிச்செயல்களையும் முதலில் கண்டுபிடித்து முறியடிப்பதும் தமிழ்நாடுதான், தி.மு.க-தான்!

ஒரே நாடு ஒரே தேர்தல், கல்வி நிதியை மறுப்பது, தொகுதி மறுவரையறை, இப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம். எதைக் கொண்டு வந்தாலும் தமிழ்நாடு தடுக்கும். தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும். ஏனென்றால், நாங்கள் திராவிட இனக்குழுவைச் சேர்ந்தவர்கள். அதுவும் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமை தாங்கிக் கொண்டிருக்கக்கூடிய திராவிட இனக்குழுவை சார்ந்தவர்கள். அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிநடத்தக்கூடிய திராவிட இனக்குழுவை சார்ந்தவர்கள்.”



**மருத்துவர் எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா**
**கழகச் செய்தித் தொடர்புக்குழு துணைச் செயலாளர்**





## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**முற்போக்கு புத்தகக்காட்சி குறித்து ‘ஆழி’ பதிப்பகத்தைச் சேர்ந்த தங்கவேல் ராஜேந்திரன் எழுதிய முகநூல் பதிவு :**

‘முற்போக்கு திருவிழா - அறிவுத் திருவிழா எப்படியும் வைத்துக்கொள்ளலாம்; கடந்த 8-ம் தேதி முதல் 16-ம் தேதிவரை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அரசியல் புத்தகங்களின் அணிவகுப்பு - 2025 என்று ஒரு புத்தகத் திருவிழா நடத்தப் பட்டது. இது முழுக்க முழுக்க தி.மு.க.-வின் இளைஞர் அணியால், அதன் செயலாளரும் தமிழகத்தின் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு சிறப்பாக நடந்தேறியது.

இப்படி ஒரு புத்தகக் காட்சியை, இதுவரை என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் ஒரு மாநிலக் கட்சியோ, ஒரு தேசியக் கட்சியோ நடத்தியதாக அறிந்ததில்லை. அந்த வகையில், இது ஒரு சிறந்த முன்னெடுப்பு என்பதில் சந்தேகம் இல்லை.’